பக்கங்கள் 18

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 15 திங்கட்கிழமை 29.01.2024 அதிர்வு 182

## சிப்பாய் சடலமாக குளத்திலிருந்து மீட்பு

களுத்துறை – ஹொரணை பகுதியில் உள்ள சிறிய குளத்திலிருந்து இராணுவ சிப்பாய் ஒருவரின் சடலம் இன்று திங்கட்கிழமை அங்குருவத்தோட்ட பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. 04

# சர்வதேச நீதிமன்று என்ற மாயை

# அர்த்தமற்றது என்பது அம்பலம்!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளக்கம்



கொழும்பு, ஜனவரி 29

தமிழ் அரசியல் தரப்புக்களினால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான எதிர்பார்ப்புக்கள் அர்த்தமற்றவை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்கள் அர்த்தமற்ற மாயைகளைத் தொடர்ந்தும் நம்பிக்கொண்டிருக்காமல் தீர்வுகளை அடைவதற்கான நடைமுறைச் சாத்தியமான முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். 04



## இராஜாங்க அமைச்சராக இன்று லொஹான் ரத்வத்த பதவி ஏற்பு

பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராக லொஹான் ரத்வத்த இன்று காலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். 04

## 30 தற்காலிகக் கடைகள் மாவனல்லவில் தீக்கிரை!



மாவனல்ல நகரில் 30 தற்காலிக வர்த்தக நிலையங்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு தீக்கிரையாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர். 04

## முல்லைத்தீவு மாத்தளன் கடலில் இளம் குடும்பஸ்தரைக் காணோம்

முல்லைத்தீவு – மாத்தளன் கடலில் குளித்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் நீரில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயுள்ளார்.

நேற்று மாலை மாத்தளன் கடலில் குளிக்க சென்ற 33 வயதுடைய 10ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இராசதுரை கஸ்தூரன் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். 04

## ஜெனரல் தயா ரத்நாயக்க சஜித் அணியில் இணைவு



ஓய்வுபெற்ற இலங்கை இராணுவ ஜெனரல் தயா ரத்நாயக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளார். 04

# ஆபத்தான படகுப் பயணத்தில் சிக்கியோரை மீட்ட படையினர்

யாழ்ப்பாணத்தில் ஆபத்தான படகு பயணத்தில் ஈடுபட்டிருந்த இரு சிறுவர்கள் உள்ளிட்ட மூவரை கடற்படையினர் மீட்டுக் கரை சேர்த்துள்ளனர்.

மயிலிட்டி கடல் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை குடும்பஸ்தர் ஒருவர் தனது இரண்டு வயது பிள்ளையையும், தனது சகோதரியின் 7 வயது மகளையும் படகில் ஏற்றி கடலில் ஆபத்தான முறையில் படகை செலுத்தியுள்ளார். அதன் போது, படகினுள் கடற்தண்ணீர் உட்புகுந்ததுடன், படகில் இருந்த பிள்ளைகளும் பயத்தில் கத்தியுள்ளனர்.

அதனைக் கடலில் சுற்றுக்காவல் (ரோந்து) பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் கண்ணுற்று, அவ்விடத்திற்கு விரைந்து, படகில் இருந்து பிள்ளைகளை மீட்டமையுடன், படகைக் கரைக்குச் செலுத்துமாறு குடும்பஸ்தருக்கு உத்தரவிட்டனர்.

கரை சேர்ந்த குடும்பஸ்தரை கடுமையாக எச்சரித்த கடற்படையினர், இரு பிள்ளைகளையும் கரையில் பாதுகாப்பாகச் சேர்ந்தனர். இதேவேளைபடகோட்டிய குடும்பஸ்தர் மது போதையில் இருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சோமாலியக் கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்ட ஆறு இலங்கை மீனவர்களையும் விடுவிப்பதற்கு முயற்சி



சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட ஆறு இலங்கை மீனவர்களையும் பாதுகாப்பாக விடுவிப்பதை உறுதி செய்வதற்காக கென்யாவிலுள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் கணநாதன் சோமாலிய கடற்படைத் தலைவருடன் பேச்சுக்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து கென்யாவிலுள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் கணனாதன் தெரிவித்தவை வருமாறு:-

சோமாலியகடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையர்கள் குறித்த தகவல்களைப் பெற்று அவர்களைப் பாதுகாப்பாக மீட்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன்.

அவர்களைப் பாதுகாப்பாக விடுவிப்பதற்காக எதியோப்பியாவிலுள்ள எனது சகாவுடன் இணைந்து சோமாலிய கடற்படைத் தளபதி அட்மிரல் அப்திவர்சமே ஒஸ்மானுடன் பேச்சுக்களை முன்னெடுத்து நெருக்கமான ஒத்துழைப்பில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றேன்.

சோமாலிய கடற்படைத் தலைவரது தொடர்பு அதிகாரி மூலம் ஐரோப்பிய ஒன்றிய கடற்படை கூட்டு நடவடிக்கை மையத்திற்கு (EU Navy JOC) நிலைமையை நிவர்த்தி செய்வதற்கும் கடத்தப்பட்ட இலங்கையர்கள் பாதுகாப்பாக நாடு திரும்புவதை உறுதி செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் குறித்து அறிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் சோமாலிய அதிகாரிகளுக்கு இடையிலான கூட்டு முயற்சிகள் கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடற்கொள்ளையர்களால் பாதிக்கப்பட்ட தனிநபர்களின் பாதுகாப்பிற்கான அர்ப்பணிப்பை இவை நிரூபிக்கின்றன.

இலங்கை மற்றும் சோமாலிய அரசுகள் இந்த விவகாரத்தை விரைவாகத் தீர்ப்பதற்கும் கடத்தப்பட்ட இலங்கையர்களின் நல்வாழ்வை உறுதி செய்வதற்கும் அர்ப்பணிப்புடன் உள்ளன எனவும் கென்யாவிலுள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் கணநாதன் மேலும் கூறினார்.

# மாணவியை பகிடிவதைக்கு உள்ளாக்கிய பல்கலைக்கழக மாணவர்கள் 6 பேர் கைது!

மாணவி ஒருவரை பகிடிவதைக்கு உள்ளாக்கியமை தொடர்பில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதி சமனலவெவ பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி மேற்படி மாணவர்கள் நேற்றைய தினம் கைதுசெய் யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மொழியியல் கற்கை பீடத்தின் நான்காம் ஆண்டு மாணவர்களே இவ்வாறு கைதாகியுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கைதானவர்கள் மொரவக்க, ருக்கஹவில, அளுத்தரம, இமதுவ மற்றும் கித்தலவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 25 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் என தெரியவந் துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சமனலவெவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# 2023 இல் 1502 சிறுமியர்கள் மீது நாட்டில் வன்புணர்வுக் கொடூரம்

## அவர்களில் 167 சிறுமியர் கர்ப்பமடைந்துள்ளனர்



இலங்கையில் கடந்த 2023 ஆம் ஆண்டு 18 வயதுக்குட்பட்ட ஆயிரத்து ஐநூற்றி இரண்டு சிறுமிகள் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் பணிப்பாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு வன்புணர்வுக்கு உள்ளான சிறுமிகளில் 167 சிறுமிகள் கர்ப்பமடைந்துள்ளனர்.

ஆனாலும் பல சம்பவங்களில் இந்தச் சிறுமிகளின் பெற்றோர் அல்லது குடும்பத்தினர் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்வதில் அலட்சியமாக செயற்பட்டுள்ளனர்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளான குழந்தைகள் மற்றும் பெண்கள் அது தொடர்பான தகவல்களை வழங்க 109 என்ற தொலைபேசி எண்ணையும் பொலிஸ் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

“இந்த தனிப்பட்ட எண் மூலமான சேவை. உங்கள் தனியுரிமையைப் பாதுகாக்கும் பெண் அதிகாரிகளால் கையாளப்படுகிறது.

“எனவே தயக்கமின்றி அவ்வாறான சம்பவங்கள் குறித்து பாதிக்கப்பட்ட மகளிர் அல்லது அவர்களின் உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும்” என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்துடன் குழந்தை வன்கொடுமைகளைத் தடுக்கவும், பாலியல் குற்றவாளிகள் பட்டியலைத் தொகுக்கவும் அரசாங்கம் சட்டங்களை மேம்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகளை உதாசீனப்படுத்தி இணையவழி காப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு



“பிரித்தானியாவில் இணையவழி பாதுகாப்பு சட்டத்தை அறிமுகப்படுத்த முன்னர் அது தொடர்பில் 4 ஆண்டுகள் ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இலங்கையில் உயர்நீதிமன்றத்தினால் முன்மொழியப்பட்ட 13 பரிந்துரைகளைக் கூட கவனத்தில் கொள்ளாமல் இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.”

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இவ்வாண்டு ஆட்சி மாற்றத்துக்கான ஆண்டாகும். மக்கள் தேர்தலை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். ஒக்டோபரில் நிச்சயம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். மக்கள் ஆணையின்றியே தாம் ஆட்சியை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை ஜனாதிபதியும், பொதுஜன பெரமுனவினரும் நன்கு அறிவர்.

இந்நிலையில் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்காக இணையவழி பாதுகாப்பு சட்ட மூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவற்றின் ஊடாக மக்கள் தகவல்களை தெரிந்து கொள்வதை தடுப்பதற்காக இந்தச் சட்டம் அவசரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட 13 திருத்தங்கள் இந்த சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை.

எனவே தான் அதனை சட்டமா அதிபருக்கு அனுப்பி பரிசீலித்து அதன் பின்னரே கையெழுத்திடுவேன் என்று கூற வேண்டிய நிலைமை சபாநாயகருக்கு ஏற்பட்டுள்ளது. பேஸ்புக், கூகுள், வட்ஸ்அப் உள்ளிட்ட நிறுவனங்களும் இதற்கு எதிர்ப்பினை வெளியிட்டுள்ளன. சட்டங்களின் ஊடாக இவற்றைக்கட்டுப்படுத்த தீர்மானித்தால், நாமும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்போம் என அந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. பிரித்தானியாவில் இவ்வாறான சட்டமொன்றை நிறைவேற்றுவதற்கு 4 ஆண்டுகள் ஊடக நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால், இலங்கையில் அவ்வாறு ஏதேனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டனவா? 2001இல் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர்களுக்கு எதிரான சட்டத்தை உடன் அமுலாகும் வகையில் நீக்கினார்.

ஆனால் இன்று அந்த ரணில் விக்கிரமசிங்க இல்லை. மேற்கத்தேய உடையணிந்த ராஜபக்ஷக்களின் கொள்கைவாதியாகவே இன்றைய ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார். இவ்வாறு எந்த முயற்சிகளை முன்னெடுத்தாலும் தமக்கான சந்தர்ப்பத்தில் மக்கள் உரிய பதிலை வழங்குவார்கள்.”– என்றார்.

# ஜேர்மனில் இருந்து வந்த யுவதியிடம் கைப்பையைத் திருடியோர் சிக்கினர்




ஜேர்மன் நாட்டில் இருந்து யாழ்ப் பாணம் வருகை தந்த பெண்ணொருவ ரின் கைப்பையைத் திருடிய குற்றச்சாட் டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சங்கானையைச் சேர்ந்த 28 வயது பெண் மற்றும் 21 வயது ஆண் சகோதரங் களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

திருடப்பட்ட பொருள்களும் சந்தேக நபர்களிடம் இருந்து மீட்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருநெல்வேலி சந்தையில் பொருள் களை கொள்வனவு செய்ய வந்த வெளி நாட்டு பெண்ணின் கடவுச்சீட்டு உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் , 500 யூரோ , 20,000 ரூபா அடங்கிய கைப்பையே கைக்குழந்தையுடன் வந்த பெண்ணொ ருவரால் நூதனமான முறையில் அப கரிக்கப்பட்டது.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப் பாய் பொலிஸ் நிலையத்தில் வெளிநாட் டவரால் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.

கண்காணிப்பு கமராவின் உதவியு டன் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக் கமைய யாழ்ப்பாண மாவட்ட பிராந் திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.

சந்தேக நபர்களும் திருடப்பட்ட பொருள்களும் மேலதிக நடவடிக்கைக் காக கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக் கப்பட்டன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சர்வதேச நீதிமன்று...**

காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்து வருகின்ற தாக்குதல் தொடர்பாக தென் னாபிரிக்காவினால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக் கிற்கான தீர்ப்பு தொடர்பாகக் கருத்து தெரிவித்த போதே ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டாவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி விக்கையில் –

கடந்த 14 வருடங்களுக்கு மேலாக சர்வதேச நீதிமன்றத்தின் ஊடகா தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுத் தரப்படும் என்ற கோஷங்களை சில தமிழ் தரப்புக்கள் மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றன.

குறிப்பாக இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற உயிரிப்புக்களுக்கான நீதி மற்றும் காணாமல் போனோருக்கான பரிகாரம் போன்றவற்றை சர்வதேச நீதி மன்றத்தின் மூலமே பெற்றக்கொள்ள முடியும் எனவும், உள்நாட்டுப் பொறி முறையில் நம்பிக்கை கொள்ள முடியாது எனவும் சொல்லுகின்ற தமிழ் அரசியல் தரப்புக்கள், தமிழ் மக்கள் மத்தியில் சர்வ தேச நீதிமன்றம் தொடர்பான மாயையை ஏற்படுத்தி இருக்கின்றன.

தற்போது, இஸ்ரேல் விவகாரத்தில் தென்னாபிரிக்காவினால் சர்வதேச நீதி மன்றில் தொடரப்பட்ட வழக்கிற்கு வழங்கப் பட்டுள்ள தீர்ப்பானது, சர்வதேச நீதிமன் றின் சிந்தனை மற்றும் பார்வை எத்தகை யது என்பதை வெளிப்படுத்தியிருக்கின் றது.

ஆயிரக்கணக்கான மக்களைத் தின மும் அழித்துக் கொண்டிருக்கிற தாக்கு தல்களை நிறுத்துமாறு உலகின் அதியுச்ச நீதிமன்றக் கட்டமைப்பான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உத்தரவிட வில்லை. இனப்படுகொலை மற்றும் யுத்த குற்றம் தொடர்பான சர்வதேச நிய மங்களை மதித்து நடக்குமாறே அது சொல்லியிருக்கிறது.

காஸாவில் குறுகிய பிரதேசத்தில் பல லட்சம் அப்பாவி மக்கள் செறிந்து வாழ்கி றார்கள் என்பதோ, தாக்குதல் தொடர்ந் தால் அப்பாவி மக்களின் அழிவுகள் தவிர்க்க முடியாதவை என்பதோ சர்வ தேச நீதிமன்றிற்கு தெரியாத சமாச் சாரங்கள் இல்லை.

அப்படியிருந்தும் தாக்குதலை நிறுத் துமாறு தீர்ப்பில் சொல்லப்படவில்லை.

இவ்வாறான சம்பவங்கள் ஊடாக, சர்வதேச கட்டமைப்புக்களின் மனோ நிலையையும் அவற்றின் நிகழ்ச்சி நிரல் கள் எத்தகையவை என்பதையும் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

**முல்லைத்தீவு...**

குடும்பத்தினருடன் கடலில் குளித் துக்கொண்டிருந்த வேளை இந்த அனர்த் தம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

குடும்பமாக ஆண், பெண்கள் என சுமார் 15 பேர் வரையில் வாகனத்தில் வந்து இந்தக் கடலில் குளித்துள்ளதை கடற்கரையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கண்டுள்ளனர்.

இதேவேளை அந்தக் கடற்கரைப் பகுதியில் குளிக்க வேண்டாம் என்று அவர்களுக்கு அறிவிவுறுத்தப்பட்டதாக வாடியில் இருந்த கடற்றொழிலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அவர் சொன்னதையும் பொருட்படுத்தாது கடலில் இறங்கி ஆண்கள் குளித்துள்ளார்கள்.

இதன்போதே ஒருவர் கரையில் இருந்து சற்றுத் தொலைவில் சென்ற நிலையில் காணாமல் போனார். அவ ரைக் காணவில்லை என கரையில் இருந்த அவரின் உறவினர்கள் கதறி அழுதுள்ளனர்.

இந்த சம்பவத்தினைத் தொடர்ந்து அவர்கள் அங்கும் இங்கும் தேடினார்கள். ஆனால் கடற்றொழிலாளர்களின் படகு கூட கடலில் இறக்க முடியாத நிலையில் கடல் அடி காணப்படுகின்றது.

முல்லைத்தீவு கடல் ஒரு ஆபத்தான கடல் எனவும், குறிப்பாக மாத்தளன் பகு தியில் இவ்வாறு காணாமல் போனவரின் உடலம் நாளையதினம் அல்லது நாளை மறுதினம் எங்கோ ஒரு கடற்கரை பகுதி யில் ஒதுங்கும், அப்போதுதான் உடலத் தினை மீட்கலாம் என கடற்றொழிலா ளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

**சிப்பாய் சடலமாக...**

அத்திலிவெவ பிரதேசத்தைச் சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டார் எனப் பொலிஸார் தெரி வித்தனர்.

உயிரிழந்த இராணுவ சிப்பாய் நேற்று ஞாயிற்றுக்கிழமை உடற் பயிற்சியின் போது கலந்து கொள்ளவில்லை எனவும் தேடப்பட்ட போதும் அவர் காணப்பட வில்லை எனவும் பொலிஸார் தெரிவித் தனர் .

இந்த விடயம் தொடர்பில் இராணுவ சிப்பாயின் வீட்டாருக்கு அறிவிக்கப்பட் டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

**ஜெனரல் தயா...**

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸவை இன்று சந்தித்ததன் பின்னர் அவர் தனது ஆதரவை அக் கட்சிக்கு வழங்கினார்.

இந்த சந்திப்பின் போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுக் கொள்கை தொடர்பான சிரேஷ்ட ஆலோசக ராக தயா ரத்நாயக்கவை சஜித் பிரேமதாஸ நியமித்தார்.

தயா ரத்நாயக்க இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராகவும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் அரசாங்கத்தின் கீழ் கைத் தொழில் அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியவர்.

**30 தற்காலிக...**

மாவனல்ல நகரின் பஸ் தரிப்பிடத் திற்கு பின்பகுதியில் உள்ள தற்காலிக கடைகளே இவ்வாறு தீக்கிரையாகி யுள்ளன.

பொலிஸார், தீயணைப்புப் படை யினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந் தனர்.

தீ பரவியமைக்கான காரணம் கண்ட றியப்படவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாவ னல்ல பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

**இராஜாங்க அமைச்சராக...**

இவர் இதற்கு முன்னரும் பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத் தக்கது.

லொஹான் ரத்வத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்– துவப்படுத்தும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்.

இவர் முன்பு சிறைத்துறை சீர்திருத்த அமைச்சராக பதவி வகித்தார்.

அனுராதபுரம் சிறையில் தமிழ் அரசி யல் கைதி ஒருவரை துப்பாக்கி முனை யில் அச்சுறுத்தியமைக்காக சர்ச்சைக் குள்ளாகி இருந்தார்.

லொஹான் ரத்வத்த, கடந்த செப்டம்பர் 21, 2021 அன்று தனது இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.



## உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட

# சாந்தன், முருகன், ரொபேட்பயஸ், ஜெயக்குமார் நால்வரையும் இலங்கைக்கு அனுப்பக்கோரி ஸ்டாலினுக்கு சிறீதரன் கடிதம்



ராஜீவ் காந்தி அவர்களின் கொலைவழக்கில் கைது செய்யப்பட்டு, 32 வருட சிறைத்தண்டனையின் பின் கடந்த 2022.11.11 அன்று இந்திய உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட சாந்தன், முருகன், ரொபேட்பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதுதொடர்பில் சாந்தனின் தாயாரால் தனக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தை மேற்கோள் காட்டி அவரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

32 ஆண்டுகால சிறைத்தண்டனையின் பின்னர் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு ஒருவருடம் கடந்துள்ள நிலையில், அவ்வழக்கிலிருந்து விடுதலையான இலங்கைப் பிரஜைகளான சாந்தன், முருகன், ரொபேட்பயஸ், ஜெயக்குமார் ஆகிய நால்வரையும் இலங்கைக்கு வரவழைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட எந்த முயற்சிகளும் பலனளிக்காததால் இன்றுவரை அவர்கள் நால்வரும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை தாங்கள் கரிசனையோடு அணுகுவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

தனது இளமைக்காலம் முழுவதையும் சிறையில் கழித்து, முதுமைக்காலத்தில் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு என்பவற்றால் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சாந்தன், தற்போது சென்னை மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த 33 ஆண்டுகளாகத் தனது மகனைக் காணாது பரிதவித்திருக்கும் சாந்தனின் தாயார், 77 வயது நிரம்பிய தனது முதுமை நிலையில் ஒருதடவை யாவது தனது மகனை நேரில் பார்வையிட வேண்டும் எனவும், அவரை இலங்கைக்கு வரவழைக்க ஆவன செய்யுமாறும் மிக உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றதிலிருந்து ஈழத் தமிழர்கள் விடயத்தில் அதீத கரிசனை கொண்டிருக்கும் தாங்கள், இவ்விடயத்தை மனிதாபிமான அடிப்படையில் அணுகி நோய்வாய்ப்பட்டிருக்கும் சாந்தனின் உடல்நிலை கருதியும், அவரது குடும்பத்தினரின் உணர்வுநிலைப்பட்ட எதிர்பார்ப்பைக் கருத்திற்கொண்டும் சாந்தன் உள்ளிட்ட நால்வரையும் இலங்கைக்கு அனுப்பிவைக்க ஆவன செய்யுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சுதந்திர தினமா? அடிமை நாளா?

வரும் ஞாயிற்றுக்கிழமை - பெப்ரவரி நான்காம் திகதி - இலங்கையின் சுதந்திர தினம்.

இலங்கையில் பிரிட்டிஷ் கொடி இறங்கி, சிங்கக் கொடி - ஒருவகையில் சிங்களக் கொடி - ஏறி சரியாக 76 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர் தாயகம் - தமிழர் தேசம் - இம்முறையும் இதனை கரிநாளாகக் கொண்டாடுகின்றது.

வடக்கு, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இலங்கை நாட்டின் சுதந்திர தினத்தை இம்முறையும் கரிநாளாக அனுஷ்டிக்க வழமைபோல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வழமையாக ஒரு நாட்டின் சுதந்திர தினம் என்பது அந்நாட்டு மக்களின் மகிழ்வுக்குரிய நாளாக இருக்கும். ஆனால் இலங்கைத் தீவில் வதியும் தமிழ்த் தேசிய மக்களைப் பொறுத்தவரை இது மகிழ்வுக்குரிய நாள் அல்ல. இது அவர்களைப் பொறுத்தவரையில் அவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் மேலாதிக்க சக்திகளின் ஆளுமைகள் கைமாறிய தினமே தவிர, அவர்களுக்கு விடுதலையோ, சுதந்திரமோ கிடைத்த தினமே அல்ல.

இன்னும் கொஞ்சம் விளக்கமாகப் பார்க்க போனால் அவர்களை அடிமைப்படுத்தி ஒடுக்கும் மேலாண்மை சக்திகளில் மோசமான தரப்பிடமிருந்து மிக மிக மோசமான தரப்பிடம் அதிகாரம் கைமாறிய தினமே இது.

ஆகவே, இது நிச்சயம் மகிழ்வுக்குரிய தினமன்று. துக்கதினம்தான். கரிநாள்தான்.

இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தையும் சேர்ந்து அடிமைப்படுத்தி வைத்திருந்த ஆங்கிலேயர்கள் அந்த அடிமை தளையின் லாகனை இந்தத் தீவின் பெரும்பான்மையினரான தென்னிலங்கை பௌத்த, சிங்களவர்களிடம் கையளித்துச் சென்ற தினம் இதுதான். தமிழர்களின் அடிமை தளையைக் கட்டி வைத்திருக்கும் அதிகாரம் கைமாறிய நாளை கொண்டாடுவதற்கு தமிழர்களிடம் எந்த நியாயமும் இல்லை.

மாறாக, துக்கம் - சோகம் - அனுஷ்டிக்கவே பல காரணங்கள் உண்டு.

இந்தத் தீவில், அட்சர கணித எண்ணுக் கணக்கின்படி பெரும்பான்மையினர் என்ற தகைமையைக் கொண்ட பௌத்த, சிங்களப் பேரினவாதிகள் அதன் காரணமாக ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி வைத்துக் கொண்டு, இத்தீவில் தமிழர் தேசம் காலாதி காலமாக ஒரு கட்டமைப்பாக நிலைபெற்றிருப்பதற்கு அடிப்படையான காரணிகளாக அமைந்த விடயங்களை இலக்கு வைத்துத் தாக்கியழிக்கும் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளே இந்த 76 ஆண்டுகளிலும் அரச அதிகாரத்தின் ஒரே செயற்பாடாக அரங்கேறி வந்திருக்கின்றமை கண்கூடு.

தமிழர் தேசத்துக்குரிய தனித்துவமான மொழி, தனியான வாழிடத் தாயகம், சமூகக் கட்டமைப்பு, பண்பாட்டுக் கோலங்கள், வழக்காறுகள், தாயக இருப்பு என்ற ஒவ்வொரு அடிப்படையையும் இலக்கு வைத்துத் தாக்கியழித்து நிர்மூலமாக்கும் பேரினவாத வெறி நடவடிக்கையே கடந்த 76 ஆண்டுகளாக இங்கு தொடர்ந்து வந்துள்ளது.

இத்தகைய அடாவடித்தனங்களை எதிர்கொண்டு மீளுவதற்காக தமிழர் தரப்பில் அகப்பலமாக உருவான ஆயுதம் தாங்கிய வலுவையும், தனது மேலாண்மையாலும், நீதி, நியாயமற்று செயல்படும் சர்வதேச சக்திகளின் உதவியுடனும் சேர்ந்து அழித்த பேரினவாதம், தமிழர் தேசத்தை நிர்மூலமாக்கி, ஆக்கிரமித்து, இந்தத் தீவைத் தனித்து பௌத்த, சிங்களவர்களுக்கு மட்டுமே உரியதாக்கும் அட்டூழியத்தைத் தங்கு தடையின்றி இப்போதும் முழு வீச்சில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தத் தீவில் தனது காலாதி கால இருப்பையே கடைசியில் தொலைக்கும் பேராபத்தில் சிக்கியிருக்கும் தமிழர் தேசத்திற்கு, இந்தத் தீவின் ஆதிக்கத்தை சிங்களப் பேரினவாதிகளிடம் வெள்ளையர்கள் கையளித்துச் சென்ற தினத்தை மகிழ்வுடன் கொண்டாடுவதற்கு எதுவுமே இல்லை - அதை கரி நாளாக அனுஷ்டிப்பதைத் தவிர.

இலங்கையின் சுதந்திர தினம் தமிழர் தேசத்திற்கு அடிமைத் தினம் என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் எங்கள் நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் நிகழ்வுகளைத்தான் தமிழர் தேசம் இத்தினத்தில் முன்னெடுக்க வேண்டும். அது தமிழர் தேசத்தின் தலைவர்களினதும் மக்களினதும் வரலாற்றுக் கடமையாகும். அதை தவிர தமிழர்களுக்கு வேறு வழியில்லை.

## கரட்டின் விலை மீண்டும் அதிகரிப்பு



பேலியகொட மெனிங் சந்தையில் மரக்கறிகளின் விலை மீண்டும் அதிகரிப்பை பதிவுசெய்துள்ளது.

இந்தநிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் 600 ரூபாயாக வீழ்ச்சியடைந்த ஒரு கிலோ கிராம் கரட்டின் விலை மீண்டும் 1,600 ரூபாயாக உயர்ந்துள்ளது.

கடந்த காலங்களில் ஒரு கிலோகிராம் கரட் 2,000 ரூபாயையும் கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 10 நாகை மீனவர்கள் விடுதலை; படகு அரசுடமையாக்கப்பட்டது

## பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு




இலங்கைக் கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பருத்தித்துறை கடற் பரப்பில் வைத்து இலங்கைக் கடற் படையினரால் கடந்த 14 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த தமிழ்நாடு, நாகை மாவட்ட மீனவர்கள் 10 பேரும் பருத்தித்துறை நீதிமன்றினால் நிபந்த னையுடன் விடுவிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மீனவர்கள் 10 பேரையும் பருத்தித்துறை நீதிமன்றில் இன்று முற்படுத்திய யாழ்ப்பாணம் மாவட்ட நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகள் மீனவர்களுக்கு எதிரான குற்றப்பத்திரத்தை நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

மீனவர்களுக்கு எதிராக முன்வைக் கப்பட்ட மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் குறைந்தபட்சம் மூன்று மாதங்கள் என்ற அடிப்படையில் ஒன்பது மாத சாதாரண சிறைத் தண்டனையை விதித்து, அதை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைத்து நிபந்தனையுடன் அவர் களை விடுவித்து பருத்தித்துறை நீதி வான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

இதேவேளை, எல்லைதாண்டிய மீன்பிடியில் ஈடுபடுத்தப்பட்ட அவர்களது படகு அரசு உடமையாக்கப்பட்டுள் ளது.அத்துடன், முதலாவது சந்தேக நபரான படகின் உரிமையாளருக்கு நீதித்துறையூடாக அழைப்பாணை அனுப்புமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது.

படகு உரிமையாளருக்கான வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

# போக்குவரத்து விதிகளை மீறிய 675 வாகனங்கள் அடையாளம்

கொழும்பு நகரினுள் போக்குவரத்து விதிகளை மீறிய 675 வாகனங்கள் சி.சி.டி.வி. கண்காணிப்பு அமைப்பு மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளன என பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித் துள்ளார்.

அதன்படி, மேற்படி போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபட்ட சாரதிகளை எச்சரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள் ளதாகவும் அவர் குறிபிபிட்டுள்ளார்.

அத்துடன், மேற்படி சாரதிகளுக்கு அது தொடர்பில் அறிவுறுத்தல்கள் அடங்கிய அறிவித்தல் ஒன்றையும் அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் முதலாம் திகதி முதல் கொழும்பு நகரில் சி.சி.டி.வி. மூலம், போக்குவரத்து விதிமீறல்களை மேற்கொண்டனர் என அடையாளம் காணப்படும் வாகன சாரதிகளுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் பிரதி காவல்துறைமா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து விதிகளை மீறும் சாரதிகளை கண்காணிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் புதிய சி.சி.டி.வி. கண்காணிப்பு முறை கடந்த 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வேலைத்திட்டத்தின் கீழ் கொழும்புக்கு பிரவேசிக்கும் வாகனங் கள் 108 சி.சி.டி.வி. கெமராக்கள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

தூரபிரதேசங்களிலிருந்து கொழும்புக்கு வரும் சாரதியொருவர் போக்குவரத்து விதிகளை மீறினால், அவர் வசிக்கும் பகுதியில் உள்ள பொலிஸ் ஊடாக அபராதப் பத்திரத்தை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள் ளதாகவும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ் மா அதிபர் இந்திக ஹபுகொட தெரிவித் துள்ளார்.

# சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்துவோருக்கு பொதுமன்னிப்பு இல்லை

## அரசாங்கம் தீர்மானம்

சிறைச்சாலைகளுக்குள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் சந்தேக நபர்கள் மற்றும் சிறைக் கைதிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

போதைப்பொருள் கடத்தலில் ஈடு படும் நபர்கள் மற்றும் ஏனைய சிறைக்கைதிகளுக்கு இனி பொது மன்னிப்பு வழங்கப்பட மாட்டாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித் துள்ளார்.

ஒன்பது சிறைகளில் புனர்வாழ்வுப் பிரிவுகள் இயங்கி வருவதுடன் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் சிறைகளில் தங்கியிருந்து பல்வேறு தொழில்களை செய்து வருகின்றனர் என தெரிய வந்துள்ளது.

இதன் காரணமாகவே போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் சிறைக்கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாய கம் தெரிவித்துள்ளார்.



# தமிழர் பண்பாடுகளை முஸ்லிம் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் பல்லின சமய கலாசார நிகழ்வு

**(எம்.எம்.றம்ஸீன்)**

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தை அடிப்படையாகக் கொண்டு பல்லின சமய கலாசார நிகழ்வுகளை மாணவர்களின் மத்தியில் அறிமுகப்படுத்தும் எண்ணக்கருவிற்கமைவாக பாடசாலையின் ஆலோசனை வழிகாட்டல் பிரிவினால் பொங்கல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் வழிகாட்டலில் நடைபெற்ற நல்லிணக்க பரஸ்பர உறவுகளைப் பேணும் இந்தத் திட்டத்தில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு பொங்கல் வழங்கப்பட்டது.

இதன் மூலம் மாணவர்களுக்கு மத்தியில் பல்லின சமய கலை, கலாசார பண்புகள் தொடர்பான மனப்பதிவுகளை ஏற்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு, தமிழர் பண்பாடுகள் தொடர்பான சிறப்பம்சங்களை உணர்த்த முடிந்தமை இந்த நிகழ்வின் வெற்றியாகக் கருத முடிகின்றமை குறிப்பிடத்தக்கது.



# சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தால் அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கான செயலமர்வு

**(த. சுபேசன்)**

சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் அரசியலில் ஈடுபடும் பெண்களுக்கான செயலமர்வு சாவகச்சேரி டச் வீதியில் அமைந்துள்ள பழநி ஆண்டவர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

அரசியலில் ஈடுபடும் மற்றும் ஈடுபடக் காத்திருக்கும் பெண்களை வளப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கருத்தமர்வில் வளவாளராக சட்டத்தரணி திருமதி கார்த்திகா ஆதித்தன் கலந்து கொண்டு அரசியலில் ஈடுபடும் பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான நுட்பங்களை விளக்கியிருந்தார்.

மேற்படி கலந்துரையாடலில் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் உத்தியோகத்தர்கள், நகரசபை மற்றும் பிரதேசசபைகளின் முன்னாள் பெண் உறுப்பினர்கள், அரசியில் ஈடுபடக் காத்திருக்கும் பெண்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.




# யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்க இன்று பதவியேற்றார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெய சிங்க இன்று பதவியேற்றார்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் அவர் கடமைகளை பொறுப்பேற்றார்.

இதன்போது சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதுவரை காலமும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமை யாற்றிய மஞ்சள செனரத் பதவி உயர்வு பெற்று சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.









# ஹெல்ப்பவர் நிறுவன ஏற்பாட்டில் மட்டக்களப்பில் பொங்கல் விழா

**(பழுவூரான்)**

ஹெல்ப்பவர் நிறுவனத்தின் ஏற் பாட்டில் பொங்கல் விழாவும், சிறுவர் விளையாட்டு போட்டியும் நேற்று மட்டக்களப்பு ஜெயந்திபுரத்திலுள்ள கருவப்பங்கேணி விளையாட்டு மைதா னத்தில் இடம்பெற்றது.

ஹெல்ப்பவர் நிறுவனத்தின் ஸ்தாபகர் எஸ்.கீர்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சம்பிர தாயப்படி பொங்கல் பொங்கி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு வழங் கப்பட்டது.

அத்துடன், சிறுவர்களின் ஆடல், பாடல் உள்ளிட்ட கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

சிறுவர்களுக்கான முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் உள்ளிட்ட போட்டிகளும் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்ற வர்களுக்கு பரிசுப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன.
















# இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(நூருல் ஹுதா உமர்)

இணைந்த கரங்கள் அமைப்பின் ஊடாக அவுஸ்ரேலியாவில் அமைந்திருக்கும் எக்ஸலன்ட் நிறுவன பணிப்பாளர் சௌந்தரராஜன் தெய்வநாயகம் குடும்பத்தாரின் நிதிப்பங்களிப்போடு மட்டக்களப்பு கல்லடி ஹறி சிறுவர் பராமரிப்பு நிலையத்திலுள்ள 45 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

ஹறி சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகர் தலைமையில் நேற்று இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஹறி சிறுவர் இல்லத்தின் பொருளாளர் அ. குணசேகரம், உறுப்பினர் ஆர். முருகதாஸ் மற்றும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான எல்.கஜரூபன்,

கே.காந்தன், எம்.ஜெகனாதன், ஆர். தினேஸ் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.
















# செங்கடல் நெருக்கடியின் காரணமாக கொழும்புக்கு அதிக கப்பல்கள் வருகை

செங்கடலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும் கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதற்கமைய, துறைமுகத்தின் கொள்ளளவு திறன் அதிகரிக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் ஜெய பாலு முனையத்திற்கு விசேட கள விஜயமொன்றை மேற்கொண்ட நிலையில் அமைச்சர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

நிலவும் போர்ச்சூழல் காரணமாக சூயஸ் கால்வாய் ஊடாக பயணிக்கும் வர்த்தக கப்பல்களுக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் காணப்படுகிறது.

மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் கிழக்கு ஆசிய பிராந்தியங்களுக்கான கப்பல் பாதையில் முக்கிய துறைமுகமாக கொழும்பு அமைந்துள்ளது.

இந்த நிலையில், கப்பல்களை பாதுகாக்கும் வகையில் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு கப்பல் நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இதன் காரணமாக கொழும்பு துறைமுகத்தில் நேற்று மாத்திரம் 24 கப்பல்கள் நங்கூரமிடுவதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், துறைமுகத்திற்கு வெளியே சுமார் பத்துக் கப்பல்கள் நங்கூரமிட்டு காத்திருப்பதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

# திருகோணமலையில் ‘உழவர் திருநாள்’ நிகழ்வு

(ஏ.எச். ஹஸ்பர்)

உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையும், திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகமும் இணைந்து நடாத்திய ‘உழவர் திருநாள்’ நிகழ்வு திருகோணமலையில் நேற்று இடம்பெற்றது.






உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் இலங்கை கிளையின் தலைவர் சுந்தரம் சிவபாலன் தலைமையில் திருகோணமலை நகராட்சி மன்றக்கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஆன்மீக அருளுரையினை வேதாகம மாமணி பிரம்ம ஸ்ரீ. சோ.ரவிச்சந்திரக் குருக்கள் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக உலகத் தமிழர் கலை மற்றும் பண்பாட்டுப் பேரவையின் சர்வதேச தலைவர் த. மகிபாதேவனும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை நகராட்சி மன்றச் செயலாளர் வெ.இராஜசேகரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

# ஆஸி அமைப்பின் இலக்கியப் போட்டியில் பரிசுக்குத் தெரிவான இலங்கை நூல்கள்




ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக நடத்திவரும் வருடாந்த இலக்கியப் போட்டியில் இம்முறை, 2022 ஆம் ஆண்டில் வெளியான நூல்களிலிருந்து நடுவர்களின் மதிப்பீட்டின் மூலம் சிறந்தனவற்றை பரிசுக்குத் தெரிவு செய்து அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை முதலான நான்கு துறைகளில் 2022 ஆம் ஆண்டு வெளியான இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் இந்தத் தெரிவுக்காக ஊடகங்களின் வாயிலாக கோரப்பட்டிருந்தன.

இந்தப் போட்டி தொடர்பான அறிவித்தலை வெளியிட்ட இலங்கை மற்றும் புகலிட தேசத்து ஊடகங்களுக்கும் இந்தப்போட்டிக்கு சங்கத்தின் போட்டி விதிமுறையின் பிரகாரம் நூல்களைத் தபாலில் அனுப்பி வைத்த எழுத்தாளர்களுக்கும் சங்கத்தின் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

போட்டி விதிமுறைகளுக்கு ஏற்றவாறு இம்முறை, கட்டுரை இலக்கியத்துறையில் நூல்கள் எவையும் சங்கத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

சிறுகதைத்துறையில் நான்கு நூல்களும், நாவல் இலக்கியத் துறையில் மூன்று நூல்களும், கவிதை இலக்கியத்துறையில் நான்கு நூல்களும் இம்முறை இந்தப் போட்டிக்காக கிடைக்கப்பெற்றன.

இவற்றுள் சிறந்த நூல்களாக ஒரு சிறுகதைத் தொகுப்பும், ஒரு நாவலும், ஒரு கவிதைத் தொகுப்பும் தெரிவாகியுள்ளன.

இவற்றுக்கு இலங்கை நாணயத்தில் தலா ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்படுகிறது.

01. வல்லமை தாராயோ – (சிறுகதைத் தொகுப்பு)
எழுதியவர் : மாத்தளை வடிவேலன்
02. வேராகிப்போன மனிதர்கள் – (நாவல்)
எழுதியவர்: ஏ.எஸ். உபைத்துல்லா.
03. கடிகாரப் பறவைகள் – (கவிதை)
எழுதியவர்:திருக்கோவில் கார்த்திகேசு.

**பரிசுகளை வழங்குபவர்கள்:**


திருமதி துளசி முருகையா: ஆஸ்திரேலியா சமூகப்பணியாளர் (அமரர்) திருமதி மகாதேவி ஜெயமணி முருகையா நினைவுப்பரிசு.

சட்டத்தரணி (திருமதி) மரியம் நளிமுடீன்: முன்னாள் இலங்கை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நினைவுப் பரிசு.

திருமதி சிவமலர் சபேசன்: ஆஸ்திரேலியா மெல்பன் 3 C R வானொலி தமிழ் குரல் ஊடகவியலாளர் (அமரர்) சண்முகம் சபேசன் நினைவுப்பரிசு .

போட்டிக்கு நூல்களை அனுப்பி வைத்த எழுத்தாளர்களுக்கும் , நூல் களைப்படித்து, மதிப்பீடு செய்த நடுவர்களுக்கும், செய்திகளை வெளியிட்ட ஊடகங்களுக்கும் ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம் நன்றியைத் தெரிவிக்கின்றது.

பரிசுக்கு தெரிவுசெய் யப்பட்டுள்ள எழுத்தாளர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதிக்கு முன்னர் பரிசுத் தொகையும் சான்றிதழ்களும் அனுப்பி வைக்கப்படும்.





# அ.தி.மு.கவின் கொடியினை தொண்டர்கள் பயன்படுத்தலாம்

## முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தகவல்

“அ.தி.மு.க. கொடியை பயன்படுத்த எனக்கு மட்டும்தான் தடை விதிக்கப் பட்டுள்ளது. ஒன்றரை கோடி தொண்டர் களுக்கு தடை ஏதுமில்லை.”

– இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்புக் குழு சார்பில் திண்டுக்கல்லில் நேற்று ஆலோசனைக் கூட்டம் நடை பெற்றது. முன்னாள்முதல்வர் ஓ. பன்னீர்செல்வம்,முன்னாள் அமைச் சர்கள் வைத்திலிங்கம், கு.ப.கிருஷ் ணன், வெல்லமண்டி நடராஜன், எம்எல்ஏக்கள்மனோஜ்பாண்டின், அய்யப்பன், கொள்கை பரப்புச் செய லாளர் புகழேந்தி, தேர்தல் பிரிவுச் செய லாளர் சுப்புரத்தினம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தின் பின்னர் ஓ.பன் னீர்செல்வம் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

‘இண்டியாகூட்டணி ஹஆண்டி மடம்’ என்பதுஉறுதி செய்யப்பட்டுள்ளது. கூட்டணியில் இருந்து ஒவ்வொருவராக வெளியேறி வருகின்றனர்.

இந்தியாவை வலிமை மிக்கதாக உருவாக்க பிரதமர் மோடி பாடுபட்டுக் கொண்டிருக்கிறார். எதிர்வரும் மக்கள வைத் தேர்தலில் அவர் மீண்டும் பிரதம ராக வேண்டும் என்ற கருத்து நாடு முழுவதும் வலுப்பெற்று இருக்கிறது. எனவே, பா.ஜ.க. தலைமையிலான கூட்டணிதான் வெற்றி பெறும். எங் கள் கூட்டணியின் தலைமை பா.ஜ.க தான்.

அ.தி.மு.க. கொடியை பயன்படுத்த ஒருங்கிணைப்பாளர் என்ற முறையில் எனக்கு மட்டும்தான் தடை விதிக்கப் பட்டுள்ளது. ஒன்றரை கோடி தொண்டர் களுக்கு தடை இல்லை. தமிழகத்தில் பழனிசாமி தலைமையில் கூட்டணி அமையாது. மக்களவைத் தேர்தலில் ஓரிடத்தில்கூட பழனிசாமி அணி வெற்றி பெறாது.” – என்றார்.

இதேவேளை, திண்டுக்கல்லில் நடந்த கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் அ.தி.மு.க. கொடி, சின்னத்தைப் பயன்படுத்தினர். இதையடுத்து, திண்டுக்கல் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் ராஜ்மோகன் மற்றும் அ.தி.மு.க. நிர்வாகிகள், அ.தி. மு.க. கொடி, சின்னத்தைப் பயன் படுத்திய ஓ.பி.எஸ். அணியினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோடிக்கணக்கான மக்களை ஒருங்கிணைத்த ராமர் கோயில்

## பிரதமர் மோடி பெருமிதம்



அயோத்தி ராமர் கோயில் இந்தியா முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களை ஒருங்கிணைக்கும் சக்தியாக திகழ்கிறது என பிரதமர் மோடி தெரி வித்துள்ளார்.

பிரதமர் மோடி, அகில இந்திய வானொலியில் மாதந்தோறும் மனதின் குரல் என்ற நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களுடன் தனது கருத்துகளை பகிர்ந்து வருகிறார். அந்த வகையில் 109 ஆவது மற்றும் இந்த ஆண்டின் முதல் நிகழ்ச்சி நேற்று ஒலிபரப்பானது.

இதன்போது அவர் கருத்து தெரி விக்கையில்,

(15ஆம் பக்கம் பார்க்க)



# உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ள சாந்தனுக்கு உயர் மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்

## வேல்முருகன் கோரிக்கை

உடல் நலக்குறைவால் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சாந்தனுக்கு உயர் மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 7 பேரில், இலங்கையைச் சேர்ந்த சகோதரர் சாந்தனும் ஒருவராவார். இவர் கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

ஆனால், இவர் திருச்சி ஒன்றிய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கையை பூர்வீகமாக கொண்டவர் என்பதால் அவருடைய சொந்த நாட்டில் இருந்து ஒப்புதல் அளித்த பின் அவரை அனுப்புவதற்கான நடைமுறை செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அதற்கான எந்த முன் முயற்சியையும் தமிழ்நாடு அரசோ, மத்திய அரசோ எடுக்காதது கவலை அளிக்கிறது.

கடந்த சில மாதங்களாக திருச்சி முகாமில் இருக்கும் சாந்தன், தன்னை சொந்த நாடான இலங்கைக்கு செல்வதற்கு அனுமதிக்குமாறு இந்திய - இலங்கை - தமிழ்நாடு அரசுகளுக்கு கடிதங்களை எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் கடந்த 32 வருடங்களாக எனது தாயாரைப் பார்க்கவில்லை.

அவருடைய இந்த முதுமையான காலத்தில் அவருடன் வாழ விரும்புகிறேன். ஒரு மகனாக அவருக்கு உதவிகரமாக இருக்க ஆசைப்படுகிறேன் என அதில் கூறியுள்ளார்.

அத்துடன் தன்னை இலங்கைக்கு அனுப்பக் கோரி சென்னை மேல் நீதிமன்றத்திலும் அவர் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த நிலையில், சாந்தனுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டு, திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் செய்தி அதிர்ச்சியும், கவலையும் அளிக்கிறது.

உயர்நீதிமன்றால் கடந்த 2022 ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டும், முருகன், சாந்தன், ரொபட் பயாஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய தமிழர்களை, திருச்சி சிறப்பு முகாமில் வைத்திருப்பது ஜனநாயகத்துக்கு விரோதமானது மனிதநேய மாண்பிற்கு எதிரானது.

எனவே, உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள சாந்தனுக்கு, உயர் மருத்துவ சிகிச்சை அளிக்க தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் , சாந்தன் ஆகியோரை விடுவித்து, அவர்கள் விரும்பும் நாட்டிற்கு செல்ல தமிழ்நாடு அரசும், ஒன்றிய அரசும் அனுமதிக்க வேண்டும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# கோடிக்கணக்கான மக்களை ஒருங்கிணைத்த ராமர் கோயில்

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

“ மிக நீண்ட விவாதத்துக்குப் பிறகு அரசியலமைப்பு சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின் அசல் பிரதியின் 3 ஆவது அத்தியாயத்தில் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் 3 ஆவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் கடவுள் ராமர், சீதை, லட்சுமணன் ஆகியோரது படங்களுக்கு நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்கள்
இடமளித்துள்ளார்கள். ராமரின் ஆட்சி நமது அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கியவர்களுக்கு உத்வேகம் அளித்தது. அதனால்தான், அயோத்தியில் கடந்த 22 ஆம் திகதி ராமர் கோயில் திறப்பு விழாவின்போது, தேவனில் இருந்து தேசம் வரை என்று குறிப்பிட்டேன்.

ராமர் கோயிலானது நாடு முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களை ஒருங்கிணைக்கும் சக்தியாக திகழ்கிறது. நம் அனைவரின் உணர்வும் பக்தியும் ஒரே மாதிரியானதுதான். ஒவ்வொருவருடைய வார்த்தையிலும், இதயத்திலும் ராமர் இருக்கிறார். இந்தத் தருணத்தில் நாட்டு மக்கள் ராம பஜனை பாடி, ராமரின் பாதத்தில் தங்களை அர்ப்பணித்தனர்.

மகர சங்கராந்தி முதல் ஜனவரி 22 ஆம் திகதி வரை வழிபாட்டுத் தலங்களில் தூய்மை இயக்கத்தைச் செயல் படுத்த வேண்டும் என்று நான் நாட்டு மக்களிடம் கேட்டுக் கொண்டேன். இதன்படி, லட்சக்கணக்கானோர் தங்களது பகுதிகளில் உள்ள புனிதத் தலங்களில் தூய்மைப் பணியை மேற்கொண்டார்கள்.” - என்றார்.

# ஜோர்தான் எல்லையில் வான்வழி தாக்குதல்: அமெரிக்க இராணுவ வீரர்கள் மூவர் பலி

ஜோர்தானின் எல்லைக்கு அருகிலுள்ள அமெரிக்க தளமொன்றின் மீது நடத்தப்பட்ட வான்வழி தாக்குதலில் மூன்று அமெரிக்க இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலில் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தாக்குதல் தீவிரமான ஈரான் ஆதரவு போராளிக் குழுக்களால் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதற்கு தகுந்த பதில் அளிக்கப்படும் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காசாவுக்கு எதிரான இஸ்ரேலின் போர் தொடங்கியதில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளில் எதிரி படைகளால் அமெரிக்க வீரர்கள் கொல்லப்படும் முதல் சம்பவமாக இது பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஒரே நாளில் மூன்று செய்மதிகளை விண்ணில் செலுத்தி ஈரான் சாதனை



ஈரான் ஒரே நாளில் மூன்று செய்மதிகளை விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ளது.

கடந்த வாரம் ஆராய்ச்சி செய்மதியொன்று ஏவப்பட்டதையடுத்து, மேற்கத்தேய நாடுகளின் விமர்சனங்கள் எழுந்த நிலையில் மீண்டும் 3 செய்மதிகளை ஈரான் விண்ணில் செலுத்தியுள்ளது.

இந்த செய்மதிகள் 450 கிலோமீற்றர் சுற்றுவட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக ஈரானின் விண்வெளி ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம், ஈரானின் இஸ்லாமியப் புரட்சிப் படை, சோரயா என்ற ஆராய்ச்சி செய்மதியை விண்வெளிக்கு அனுப்பியது.

இதனை பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகியவை கண்டித்திருந்தன.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் ஈரானின் இதுபோன்ற செயற்பாடுகளுக்கு எதிராக பலமுறை எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்தியாவுடன் மோதல் போக்கை மேலும் வலுவாக்கும் மாலைதீவு!

மாலைதீவின் ஜனாதிபதி சீனாவை புகழ்ந்து பேசியது மறைமுகமாக இந்தியாவை சீண்டுவதாக அமைந்துள்ளது எனகருத்துக்கள்வெளியிடப்படுகின்றன.

மாலைதீவின் இறையாண்மையை சீனா மதிக்கிறது. இரு நாடுகளும் ஒருவரையொருவர் மதிக்கின்றன என்றும் சீனாவின் பட்டுப்பாதை முன்முயற்சியானது இது இருதரப்பு உறவுகளை புதிய நிலைக்கு கொண்டு சென்றுள்ளது எனவும் மாலைதீவின் ஜனாதிபதி முகம்மது முய்சு சீனாவை புகழ்ந்து பேசியுள்ளார்.

அத்துடன், மாலைதீவின் உள்விவகாரங்களில் தலையிடும் நாடு சீனா அல்ல, இதனால்தான் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான உறவு உள்ளது என்றும் சீன-மாலைதீவு உறவுகள் எதிர்காலத்தில் மேலும் வலுவடையும் என்று நம்பிக்கை உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



அதுமாத்திரமன்றி, சீன ஜனாதிபதி ஜின்பிங் குடிமக்களின் நலனை முதன்மைப்படுத்தி வருகிறார், அவரது தலைமையின் கீழ் சீனாவின் பொருளாதாரம் புதிய உச்சத்தை எட்டியுள்ளது. மாலைதீவின் இலக்குகளை அடையவும் சீன அரசு உதவும் என்று ஜின்பிங் என்னிடம் உறுதியளித்துள்ளார் எனவும் மாலைதீவு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மாலைதீவின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதும், மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப முன்னேற்றத்தை கொண்டு வருவதும் எனது இலக்கு, மாத்திரமல்லாமல் வளர்ந்த நாடுகளுடன் இணக்கமாக செயற்படும் நாடாக மாலைதீவை மாற்ற விரும்புகிறேன் என அவர் கூறி இந்தியாவை சீண்டியுள்ளார்.

அண்மையில் மாலைதீவில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற முகமது முய்சு, இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறார்.

சீன ஆதரவாளரான அவர், மாலைதீவில் இருந்து இந்திய இராணுவ வீரர்கள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.





# கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக கோபாலரத்தினம் நியமனம்

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, திறன் விருத்தி, மகளிர் அபிவிருத்தி நீர் விநியோக துறை அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி கலாநிதி மூ.கோபாலரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான இவர், கிழக்கு மாகாண சபையின் பொதுச் சேவை ஆணைக்குழு மற்றும் பேரவைச் செயலாளராக கடமை புரிந்துவந்தார். அதற்கு முன்னர் திறைசேரி முகாமைத்துவ திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் ஐ.எம். ஹனீபாவுக்கு கௌரவம்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

ஓய்வுபெற்ற அரசாங்க அதிபரும் முன்னாள் பிரதேச செயலாளருமான சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ.எம். ஹனீபாவின் நற்பணியைக் கௌரவிக்கும் நிகழ்வு அட்டாளச்சேனையில் இடம் பெற்றது

நாம் ஊடகர் பேரவை மற்றும் ருஹுணு லங்கா அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த “நம்மவரைக் கொண்டாடுவோம்” எனும் நிகழ்விலேயே இந்த கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது

‘நாம் ஊடகர் பேரவை’ தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் யூ.எல். மப்றூக் தலைமையில் அட்டாளைச்சனை பிரதேச செயலக மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. சாபிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல்.எம். ஹனீபா, பொத்துவில் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.ஐ.எம். பிர்னாஸ், தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எல்.எம். ஹனீஸ், அட்டாளைச்சேனை பிரதேச உதவிச் செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், ரு/ஹுணு லங்கா தலைவரும் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருமான எம்.எஸ்எம். ஜவ்பர், ‘நாம் ஊடகர் பேரவை’ செயலாளர் றிசாத் ஏ காதர், அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசல் முன்னாள் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்

இதன் போது ஓய்வுபெற்ற அரசாங்க அதிபரும் முன்னாள் பிரதேச செயலாளருமான சம்மாந்துறையைச் சேர்ந்த ஐ.எம். ஹனீபாவின் நற்பணியை பாராட்டி நினைவு சின்னம் வழங்கப்பட்டிருந்தது.



# இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் அவைத் தலைவர் நியமன வழிபாடு

(பழுவூரான்)

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 14 ஆவது வடக்கு – கிழக்கு திருமாவட்ட அவைத் தலைவராக அருள்திரு அருளானந்தம் சாமுவேல் சுபேந்திரன் நியமனம் பெறும் வழிபாட்டு நிகழ்வு நேற்று இடம்பெற்றது. மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவை தலைவர் அருள்திரு. டபிள்யூ.பீ.எபநேசர் ஜோசப் பினால் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து சத்திய பிரமாண நிகழ்வு புளியந்தீவு மெதடிஸ்த தேவாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன், வட கிழக்கு திருமாவட்ட அவை உறுப்பினர்கள், திருப்பணியாளர்கள், போதகர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.











